**நிகழும் திருவள்ளுவராண்டு சார்வாரி வருடம் 2020-ம் ஆண்டு ஜூன் மாதம் 9-ம் தேதி வைகாசி மாதம் 27-ம் தேதி செவ்வாக்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

பொருள் : 1

இந்நகராட்சியிலுள்ள பழைய அலுவலக கட்டிடம், கண்ணாடி மாளிகை ஆகியவற்றினை இடிக்கப்பட்டதில் பெறப்பட்டுள்ள மரங்கள், அலுவலகத்தில் பயன்படுத்தப்பட்டு உபயோகமற்ற தெருவிளக்கு உபகரணங்கள், குடிநீர் உபகரணப் பொருள்கள் மற்றும் அண்ணா திடல் அருகில், தீயணைப்புதுறை அலுவலகம் அருகிலும் இயற்கை சீற்றத்தினால் கீழே விழுந்துள்ள மரம் ஆகியவற்றை ஏலம் கோரி ஒப்படைக்க 05.06.2020 அன்று காலை 11.00 மணிக்கு ஏலம் கோரப்பட்டதில் திரு. எஸ். கல்யாணி என்பவரால் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ. 5.65–ற்கு (ரூபாய். ஐந்து இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம்) ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி அதிகபட்ச ஏலம் தொகைக்கு ஆட்சேபணை தெரிவிப்பவர்களுக்காக 08.06.2020 அன்று பிற்பகல் 2.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டதில் யாரும் ஆட்சேபணை தெரிவிக்கப்படாததால் திரு.எஸ்.கல்யாணி என்பவரின் உயர்ந்தபட்ச ஏல கேள்வி தொகையான ரூ.5.65-னை ஏற்க்கவும் ஏலத்தாரரால் ரூ.5.65 இலட்சம் முழுவதும் செலுத்தப்பட்டுள்ளதால் இவருக்கு மேற்படி பொருட்களை ஒப்படைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 245 அனுமதிக்கப்பட்டது.**

**நிகழும் திருவள்ளுவராண்டு சார்வாரி வருடம் 2020-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் தேதி ஆனி மாதம் 09-ம் தேதி செவ்வாக்கிழமை காலை 11:00 மணிக்கு நடைபெற்ற வால்பாறை நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள் விபரம்.**

**பொருள் : 1**

இந்நகராட்சியிலுள்ள பழைய அலுவலக கட்டிடம், கண்ணாடி மாளிகை ஆகியவற்றினை இடிக்கப்பட்டதில் பெறப்பட்டுள்ள கற்கள் (நகராட்சி ஆய்வு மாளிகைக்கு அருகில், நகராட்சி பூங்கா மற்றும் நகராட்சி உரக்கிடங்கு ஆகிய பகுதிகளில் இருந்து பெறப்பட்ட கற்கள்) மற்றும் தற்போது உபயோகமற்ற நிலையில் உள்ள குப்பைத் தொட்டிகள் (நகராட்சி உரக்கிடங்கு மற்றும் நகராட்சி அலுவலகத்தில் உடைந்து கிடந்த பழைமையான தொட்டிகள்) ஆகியவற்றை ஏலம் கோரி ஒப்படைக்க 19.06.2020-ம் நாள் அன்று காலை 11.00 மணிக்கு ஏலம் கோரப்பட்டதில் திரு.எஸ்.பொன்கணேஷ் என்பவரால் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ.2.10–ற்கு (ரூபாய். இரண்டு இலட்சத்து பத்தாயிரம்) ஏலம் கோரப்பட்டுள்ளது. மேற்படி அதிகபட்ச ஏலம் தொகைக்கு ஆட்சேபணை தெரிவிப்பவர்களுக்காக 22.06.2020 அன்று பிற்பகல் 2.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்பட்டதில் யாரும் ஆட்சேபணை தெரிவிக்கப்படாததால் திரு.எஸ்.பொன்கணேஷ் என்பவரின் உயர்ந்தபட்ச ஏல கேள்வி தொகையான ரூ.2.10-னை ஏற்க்கவும் ஏலத்தாரரால் ரூ.2.10 இலட்சம் முழுவதும் செலுத்தப்பட்டுள்ளதால் இவருக்கு மேற்படி பொருட்களை ஒப்படைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 246 அனுமதிக்கப்பட்டது.**